செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.03.2018

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) :பெப்ருவரி 2018


### தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2018 பெப்ருவரி மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2018 சனவரி மாதத்தில் 5.4% இருந்து 3.2% ஆக குறைவடைந்துள்ளது என தெரிவித்தார் 2018 பெப்ருவரி மாதத்தில் பதிவாகிய 3.2% பணவீக்கமே, 2016 ஏப்றல் மாதத்திலிருந்து இதுவரையில் பதிவாகிய ஆகக்குறைந்த பணவீக்கமாகும். 2017 பெப்ருவரி மாதத்தில் ஒப்பீட்டளவில் நிலவிய அதிகரித்த விலை மட்டங்கள் மற்றும் 2018 பெப்ருவரி மாதத்தில் காணப்பட்ட குறைந்த உணவு விலைகள் என்பன 2018 பெப்ருவரி மாதம் பொருட்டு பதிவாகிய பணவீக்கத்திற்கு பிரதான காரணங்களாக அமைந்தன. 2018 பெப்ருவரி மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே 1.6%, 1.5% ஆக இருந்த அதேவேளை, 8.2% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 பெப்ருவரி மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 4.5%, 3.8% ஆக காணப்பட்டன.

இருப்பினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 சனவரி மாதத்தில் பதிவாகிய 125.8 இருந்து 2018 பெப்ருவரி மாதத்தில் 123.7 ஆக குறைவடைந்துள்ளது. இது, 2018 சனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 பெப்ருவரி மாதத்தில் 2.1 சுட்டெண் புள்ளிகள் அல்லது 1.7 சதவீத புள்ளிகள் குறைவொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 1.96% ஆல் குறைவடைந்தமையும் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.35% ஆல் அதிகரித்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் குறைவுக்குக் காரணம் மரக்கறி, பச்சை மிளகாய், சின்ன வெங்காயம், அரிசி, பெரிய வெங்காயம், வாழைப்பழம், மைசூர் பருப்பு, புதிய மீன், உருளைக்கிழங்கு, சீனி, எலுமிச்சம்பழம், மற்றும் பப்பாசிப்பழம் ஆகியவற்றின் விலைகள் குறைவடைந்தமையேயாகும். எனினும், சுட்டெண்ணில் அதிகரித்த செலவுப் பெறுமதிகள் தேங்காய், மிளகாய்த் தூள் மற்றும் கோழி இறைச்சி என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 பெப்ருவரி மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘கல்வி’, ‘சுகாதாரம்’, ‘ஆடையும் காலணியும்’, ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’, ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’, ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’, ‘போக்குவரத்து’ மற்றும் ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ பிரிவு பொருட்டு செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகியது. ‘தொடர்பாடல்’ பிரிவு பொருட்டான செலவுப் பெறுமதியில் இம்மாதம் மாற்றம் எதுவும் காணப்படவில்லை.




**தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)**

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | பெப்ரவரி | 119.9 | 0.5 | 8.2 |
| | மார்ச் | 119.5 | -0.3 | 8.6 |
| | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | யூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | யூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்